மர்ம முக்கோணங்கள்

# ஸ்ரீதர் பிரியன்

notionpress.com

INDIA • SINGAPORE • MALAYSIA

**Notion Press**

Old No. 38, New No. 6
McNichols Road, Chetpet
Chennai - 600 031

First Published by Notion Press 2019
Copyright © Shreedher Priyan 2019
All Rights Reserved.

ISBN 978-1-xxxxx-xxx-x

This book has been published with all efforts taken to make the material error-free after the consent of the author. However, the author and the publisher do not assume and hereby disclaim any liability to any party for any loss, damage, or disruption caused by errors or omissions, whether such errors or omissions result from negligence, accident, or any other cause.

No part of this book may be used, reproduced in any manner whatsoever without written permission from the author, except in the case of brief quotations embodied in critical articles and reviews.

இந்த புதினத்தின் ட்ரைலரை சமூகவலைத்தளங்களில் வெளியிட்ட மக்கள் செல்வன். திரு. விஜய் சேதுபதி மற்றும்

இந்த புதினத்தின் ஆங்கில பதிப்பை வெளியிட்ட பாடலாசிரியர் திரு. விவேக், நீதிபதி. பாஸ்கரன், நீதிபதி குலசேகரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

# நன்றியுரை

செல்வி வினிதா பரமசிவம் எனக்கு ஜூனியராக நான் படித்த கல்லூரியில் படித்து கொண்டுள்ளார். அவர் இந்தப் புதினத்தின் கதையை ஆங்கிலத்தில் எழுதியவர். நான் தொலைபேசியில் ஒவ்வொரு அத்தியாயங்களாக சொல்லுவதைக பொறுமையாகக் கேட்டு, எழுதிக் கொடுத்துள்ளார். கிட்டத்தட்ட ஒரு வருடம் இதற்காக உழைத்துள்ளார். இந்தப் புதினத்தில் அவருடைய வர்ணனைகளும் உருவகங்களும் உங்களை புது உலகிற்கு அழைத்துச் செல்லும்.

மருத்துவர் பா. ரஞ்சித் என்னுடன் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்.

அவர் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்.

இந்த புதினத்தின் ஆங்கில பதிப்பை தொகுப்பதிலும், தமிழாக்கம் செய்வதிலும் அரும் பணியாற்றியுள்ளார்.

முனைவர் திருமதி ஜெ. உமா சாமுண்டேஸ்வரி தஞ்சைக்கருகேயுள்ள அ. வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் ஆங்கில இணைப் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இப்புதினத்தின் ஆங்கிலப் பதிப்பு ஆக்கத்திலும் தமிழாக்கத்திலும் அவரது பங்களிப்பு மிகப் பெரியது. கிட்டத்தட்ட 15 அத்தியாயங்களைக் கொடுத்து ஒரு வாரத்திற்குள் தமிழாக்கம் செய்து கொடுக்கும்படி நான் அவரை அவசரப் படுத்தியதை சவாலாக ஏற்றுக்கொண்டு, அந்த கால அவகாசத்திற்குள் திறம்பட செய்து கொடுத்துள்ளார். அவருடைய பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அலாதியானது.

# நன்றியுரை

செல்வி. சரிதா ரவீந்திரன், என் கல்லூரியில் உள்ள ஜூனியர், இந்த கதையின் துணை தொகுப்பாளர். கதையின் முக்கிய திருத்தங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து, இந்த நாவலை விரைவில் முடிக்க காரணமாக இருந்தவர்.

மருத்துவர் பா. ரஞ்சித்திற்கும், செல்வி சரிதாவிற்கும், முனைவர் உமா சாமுண்டீஸ்வரிக்கும், செல்வி வினிதா பரமசிவத்திற்கும் நான் மிகவும் நன்றிக் கடன் பட்டவன் ஆவேன்.

செல்வி சரிதா

வினிதா பரமசிவம்

பா. ரஞ்சித்

திருமதி உமா சாமுண்டீஸ்வரி

# ஆசிரியர் குறிப்பு

இந்த புதினத்தின் ஆசிரியர் ஸ்ரீதர் பிரியன், ஒரு மருத்துவ பட்டதாரி. 24 வயதான இவர் தஞ்சாவூரை பிறப்பிடமாகக் கொண்டவர். இளவயது வரலாற்று புதின ஆசிரியர் என்ற பெருமைக்குரியவர். சிறுவயது முதல் படிப்பு, விளையாட்டு, இசை, பாடத் தொடர்பான போட்டிகள் யாவற்றிலும் சிறந்து விளங்கு பவர். 5 வருடங்ககாக யோசித்து இந்த புதினத்தை உருவாக்கியுள்ளார். இதற்கு முன் பல குறும் படங்கள் எடுத்துள்ளார். அவை Priyan 666 என்ற YouTube ஊடகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளன மற்றும் அவர் Priyanograph என்ற பெயரில் புகைப்பட முகநூல் பக்கம் வைத்துள்ளார், அது இவரது படைப்பாற்றலுக்குச் சான்றுகள்.

தஞ்சாவூரிலுள்ள பிளேக், மேக்ஸ்வெல், கேந்திரிய வித்யாலயா, டான்பாஸ்கோ, நாமக்கல்லில் உள்ள கிரீன் பார்க் பள்ளிகளில் பயின்றவர். தஞ்சாவூரிலுள்ள சாஸ்திரா நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு வருடம் B.Tech (Electronics & Communication Engineering) பயின்றுவிட்டு பின்னர் மதுரையிலுள்ள வேலம்மாள் மருத்துவ கல்லூரியில் MBBS படித்து தேர்ச்சி பெற்று அங்கேயே தற்போது பயிற்சி மருத்துவராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவரது மருத்துவ ஆராய்ச்சி கட்டுரைக்காக பஞ்சாபிலுள்ள லூதியானாவில் நடைபெற்ற மருத்துவ கருத்தரங்கில் Dr. Mittal விருது பெற்றவர்.

பள்ளி படிப்பின் போது கிரிக்கெட் போட்டிகளில் தஞ்சை மாவட்டத்திற்காக விளையாடியுள்ளார். Guitar, Keyboard போன்ற இசைக்கருவிகள் வாசிப்பதில் வல்லவர். பல்வேறுபட்ட கல்வி நிறுவனங்களில் பயின்றதால் கிடைத்த அனுபவங்களும் இவரது சிந்தனை வளமும், திரட்டியுள்ள வரலாற்று சான்றுகளும், அறிவியல் தொழில்நுட்ப அறிவும் இந்த புதினத்தில் மிளிர்வதைக் காணலாம்.

# என்னுரை

கடவுளுக்கும் இந்த புதினத்தை படிப்பதற்கு முன்வந்த உங்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த கதை உங்களை வேறொரு உலகத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதை நிச்சயமாகக் கூறமுடியும். அதிலிருந்து நீங்கள் விலகிச் செல்ல முடியாது. அதற்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

இது, பண்டைய வீர சோழ மரபினர் பற்றிய ஒரு வரலாற்று அறிவியல் புனைவு. நமது பண்டைய அரசர்களின் வீர பராக்கிரமங்கள் கல்வெட்டுக்கள் தாண்டி மக்கள் அறிய வேண்டிய ஒன்று. அவர்தன் புகழும் பெருமையும் அனைவரும் அறிய வேண்டிய ஒன்று. நான் தஞ்சாவூர் பெருவுடையார் கோவிலுக்குச் செல்லும் போதெல்லாம் அதன் கட்டிடக்கலையையும் அங்குள்ள நுணுக்கமான சிற்பங்களையும் அதற்குக் காரணமான அரசர்களின் அருமை பெருமைகளையும் அறிந்து மெய்சிலிர்த்துப் போவேன்.

ராஜராஜ சோழனையும் ராஜேந்திர சோழனயும் அவர்களது கடற்படை, அவர்கள் கைப்பற்றிய நாடுகள், அவர்களது வாணிபத் தொடர்புகள் பற்றி தெரிந்து கொள்ளும் போது அவர்களது புகழை பரப்ப நாம் ஏதேனும் பங்களிக்க வேண்டும் என்ற ஒரு உந்துதல் இருந்து கொண்டே இருந்தது. நம் தமிழ் மன்னர்களைப் பற்றிய பல அரிய தகவல்களை திரட்டத் தொடங்கினேன். அவர்கள், மற்ற அரசகுலத்தவரைக் காட்டிலும் வீரத்திலும் புத்தி கூர்மையிலும் சிறந்து விளங்கியிருந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களைப் பற்றிய செய்திகளை ஏன் நம் பள்ளி சரித்திரப் பாடங்களில் படிக்கவில்லை என்று வியப்படைந்தேன். அந்த அருமை பெருமைகள், யாரும் செல்லாத கோவில்களின் இருளான தாழ்வாரங்களில் மண்டிக்

கிடப்பதாக உணர்ந்தேன். அந்த சரித்திரங்கள் புழுதிப்படிந்து கிடப்பது நமக்கு அவமானமில்லையா? அவர்களின் புகழ் வருங்கால சந்ததிகளுக்கு சேர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கில்

இது பற்றிய ஒரு திரைப்படம் எடுக்க வேண்டும் என்பதே எனது ஆவல். ஆனால் நான் சார்ந்திருக்கும் மருத்துவத் துறையின் பணி நிமித்தம் காரணமாக அவ்வெண்ணம் இப்பொழுது ஈடேறவில்லை. திரைக்கதையை புதின வடிவில் மாற்றி அமைத்திருக்கிறேன். இது ஒரு திரைப்படமாக வந்தால், மிக்க மகிழ்ச்சி அடைவேன்.

இந்த நாவலை 2012ல் எழுதத் தொடங்கினேன். அப்போது இது புழுதியுடன் இருக்கும் தாதுவாக இருந்தது. அது தூய்மையான வடிவம் பெற்றது. 2017 லிலிருந்து இந்த புதினத்தை செதுக்கத் தொடங்கினேன்.

இவர்கள் உதவியின்றி இந்தப் புதினத்தை நான் செதுக்கியிருக்க இயலாது

எழுத்து: வினிதா பரமசிவம்

தமிழ் மொழி பெயர்ப்பு: ரஞ்சித், உமா சாமுண்டீஸ்வரி

தமிழ் editing: நந்தகுமார், ரஞ்சித், உமா சாமுண்டீஸ்வரி.

துணை editor: சரிதா

கதை விமர்சனம், பரிந்துரைகள்: கார்த்திகா, தமிழ்நிலா, ராகுல் தீபக் ராஜ், ஷியாம், ராஜா க்ரிஷ்

Trailer, motion poster: தினேஷ் ஆர்த்தா

புதின அட்டை தயாரிப்பு: சத்யா சுப்பிரமணி, ஈஸ்வர் விஜய்

Trailer இசையமைப்பு: விக்கி இசையமைப்பாளன்

விளம்பர ஓவியங்கள்: காயத்ரி தேவி

விளம்பர உதவிகள்: பரிவு சக்திவேல்

ட்ய்பிங் உதவி: மதன்

உதவி அணி: ஆதர்ஷ், விக்கி முருகவேல், ரக்ஷயா தேவி, சிவரஞ்சனி, அருண் பிரசாத், அபிஷேக் சீதாராமன், மோகன் தமிழ், ஆனந்த் கார்த்திகேயன், வித்யாபதி, பிரேம், அபிஷேக், சரண்யா

எனது பெற்றோர்கள் - நந்தகுமார், வாணி பிரியதர்ஷினி. என்னுடைய விடாமுயற்சிக்கு இரு தூண்களாக இருந்து எனது கனவை நினைவாக்கினார்கள்.

இந்தக் கதையை படமாக மாற்றினால் எந்த கதாபாத்திரங்கள் யார் நடித்தால் கச்சிதமாக இருக்கும் என்று உங்கள் கருத்தினை சமூக வலைதலத்தில் hashtag மூலம் எங்களுக்கு தெரியபடுத்துங்கள். உங்கள் விமர்சனங்களுக்காக காத்திருக்கிறேன்.

Fb profile: shreedher priyan

Insta id: Priyan666

Twitter: @666priyan

# அத்தியாயம் 1

ஆதவன் அனலை அந்த போர்க்களத்தின் மேல் உமிழ்ந்து கொண்டிருந்தான். காலனின் மறு உருவமாய் யுத்த பூமியில் அந்த சரித்திர நாயகன் நின்று கொண்டு இருந்தான். நெற்றியில் அவன் வியர்வையும் எதிரிகளின் செங்குருதியும் இரண்டறக் கலந்து இருந்தன. கார்மேகம் பொழியும் மழை போல அவன் கைகள் அம்புமாரியை இடைவிடாது செலுத்தின. அவன் உதடுகள் “ஓம் நமசிவாய” என்று ஊழித் தாண்டவம் ஆடிய உமாபதியின் நாமத்தை ஓயாது முணுமுணுத்தன.

கலிங்க தேசத்தின் அரசன், தன் எதிரி நாட்டு வீரனின் பராக்கிரமத்தைக் கண்டு திகைத்தான். வேட்டையாடும் வேங்கையின் சீற்றத்தையும் ஆற்றலையும் அவன் யுத்த கலை ஒத்திருந்தது. கலிங்க அரசன் இதயத்தில் புலிக்கொடி கொண்ட சோழ மறவனின் பாய்ச்சல் இடியாய் இறங்கியது.

கலிங்க நாட்டு மன்னன் தோல்வியின் பயத்தில் நடுங்கினான். கண்கள் கோவைப் பழமாய் சிவக்க, ரத்தம் கொதிக்க கோபமாய் தன் படைத்தளபதியை அழைத்தான். “நம் படைகளை அழித்துக்கொண்டிருக்கும் அவன் மரணம் மிகக் கொடூரமானதாக இருக்க வேண்டும். வேண்டியதைச் செய்!” என்று கட்டளையிட்டான்.

தளபதி தன் மன்னனின் உத்தரவை நிறைவேற்றும் வண்ணம், கலிங்க படையின் பாகன் ஒருவனை அவ்வீரன் இருக்கும் திசையில் செல்லுமாறு பணித்தான்.

அந்த சோழ வீரன், தன் போர் யானையின் மேல் நின்று அனைத்து சோழப் படைகளையும் வழி நடத்திக் கொண்டிருந்தான். அவன் நோக்கம், வெற்றி அடைய வேண்டும் என்பதாக மட்டுமே இருந்தது.

“சோழம்! சோழம்! சோழம்!” என்று அவன் குரல் கேட்டு, சுற்றியிருந்த வீரர்கள் பெரும் சக்தி பெற்று சோர்வு மறந்து எதிர் நாட்டினரை வெட்டி வீழ்த்தினர். தன் சக வீரர்களின் மீது அவன் வைத்த நம்பிக்கை பொய்க்கவில்லை. அவர்களை உற்சாகப்படுத்துவதில் தன் கவனத்தை வைத்திருந்ததால், தன்னை நோக்கி வந்த ஆபத்தை பார்க்காமல் இருந்தான்.

கலிங்க நாட்டுக் களிறை வேகமாக செலுத்தினான் பாகன். அந்த யானை தன் வழியில் குறுக்கிட்ட எவரையும் தூக்கி எறிந்தது. யானையின் முதுகில் சிறு ஊசிகளை பாகன் பாய்ச்சினான். வலியால் ஐந்தறிவு உயிரினம் துடித்தது. பாகன் கொடுத்த வலியை எதிர்ப்பட்ட மனிதர்களின் மேல் காட்டியது. ஆம்! பாகன் விஷம் தோய்த்த ஊசிகளைப் பயன்படுத்தி கொண்டிருந்தான். சோழநாட்டு மறவனின் கூரிய கண்கள் எதிர்வரும் ஆபத்தை உற்று நோக்கின. பாகன் செயலால் யானை படும் வேதனையை இமைக்கும் நொடியில் புரிந்து கொண்டான்.

‘பாவம்! யானைக்கு மதம் பிடித்து விட்டது!’ என்று எண்ணிக் கொண்டான். தன் உயிரை எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மற்றொரு உயிர் வதைக்கப் படுவதை எண்ணி வருந்தினான். களத்தில் நின்று கருணை கொள்ள அவனுக்கு நேரம் இருக்கவில்லை. யானை மெல்ல துடித்து இறப்பதைவிட முன்னரே அதன் உயிரை எடுக்க முடிவு செய்தான்.

மதம் கொண்ட யானை, வீரனை நோக்கி வேகமாக முன்னேறியது. பாகன் இறுதியாக ஒரு ஊசியை குத்தி விட்டு, கீழே குதித்து வேறு திசையில் ஓடினான். யானை தன் மூர்க்கத்தின் உச்சத்தைத் தொட்டது. எதிர்ப்படும் கலிங்கநாட்டு வீரர்களையும் கொன்றபடி முன்னேறியது.

தன் யானையை, எதிரில் வந்து கொண்டிருந்த யானையின் வசம் செலுத்தும்படி வீரனானவன் தன் பாகனிடம் கட்டளையிட்டான். அந்த செயலின் ஆபத்தை உணர்ந்த போதிலும், தன் தலைவன் மீது கொண்ட நம்பிக்கையினால் சொன்னதை செய்தான் பாகன்.

கலிங்க அரசன் தன் கண் முன்னே நடந்து கொண்டிருந்த விசித்திரக் காட்சியைக் கண்டான்.

“நடப்பது என்ன? மடிந்தானா அவன்?” என்று அமைச்சரிடம் விசாரித்தான்.

“இல்லை வேந்தே! திட்டம் ஏதோ வைத்து இருக்கிறான் அவன்” என்று பதில் வந்தது அமைச்சரிடமிருந்து.

*அவன் தப்பவே முடியாது. என் நாட்டு யானை அவனை நிச்சயம் வீழ்த்தும்* என்று தனக்குத்தானே நம்பிக்கை கூறிக் கொண்டான்.

இரு களிறுகளும் ஒன்றை ஒன்று நெருங்கின. கலிங்க மன்னன் இதயம் அவற்றின் வேகத்துக்கு ஈடாக துடித்தது. ஆயினும், இறுதி நேரத்தில் அந்த வீரனின் யானை விலகி வேறு பக்கமாய்ச் சென்றது.

கோபத்தில் கலிங்க மன்னன் தன் அம்பாரியை உதைத்தான். “மன்னா! அங்கே நோக்குங்கள்!” என்று கூக்குரலிட்டார் ஒரு கலிங்க அமைச்சர்.

“என்ன?”

நசுங்கிய அவன் பிணத்தைக் காண ஆவலுடன் போர்க்களத்தை கலிங்க அரசன் உற்று நோக்கினான். எந்த இடத்திலும் அவனை பார்க்க இயலவில்லை.

“இறந்து விட்டானா? யாராவது தெளிவாகக் கூறுங்கள்” என்று தன்னைச் சுற்றி இருந்தவர்களிடம் கூறினான்.

“அரசே! மேற்கே பாருங்கள்!” என்று தன் மெய்க்காப்பாளன் காட்டிய திசையில் தன் பார்வையைத் திருப்பினான் வேந்தன்.

கருங்குன்றின் மீறி எழும் காலை பகலவனைப் போன்று, அந்த கரிய யானையின் முதுகின் மீது நின்றிருந்தான் அந்த வீரன். வாடைக்காற்று அவன் கேசத்தை தழுவிச் சென்றது. அவன் உதடுகளில் புன்னகை மாறாமல் இருந்தது.

கலிங்க வேந்தனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அந்த எதிரி நாட்டு மாவீரன் தன் கையிலிருந்த வேலாயுதத்தை வான் உயர்த்தி தன் சக்தி உள்ள அளவு மட்டும் யானையின் நெற்றியில் குத்தினான். யானையின் உயிரற்ற உடல் மண்ணில் சரிந்தது.

தன் கண் முன்னே நடந்தது கனவா இல்லை உண்மையா என்று புரியாமல் கலிங்க மன்னன் திகைத்து நின்றிருந்தான். குரல் நடுங்க தன் முதல் மந்திரியிடம், “யார் அவன்?” என்று வினவினான்.

தெற்கில் இருந்து வந்தவன். சேர, பாண்டிய, ஈழ, சாளுக்கிய நாடுகளை வென்றவன். போர்க்கலையில் நிகரில்லாதவன். விஜயாலய சோழன் வம்சத்தில் வந்தவன். ஒரு குடையின் கீழ் இந்த உலகை

ஆண்ட ராஜராஜசோழனின் வாரிசாய் பிறந்தவன். வீரமும் பண்பும் ஊட்டி குந்தவை பிராட்டியாரால் வளர்க்கப்பட்டவன். மும்முடிச் சோழ மண்டலத்தின் தலைச் சிறந்த வீரன்.

பரகேசரி, யுத்தமாமல்ல,

“ராஜேந்திர சோழன்”



# அத்தியாயம் 2

## வாடிகன் நகரம்

***10.01.2012***

## காலை *10* மணி

வாடிகன் நகரம் ரோம் மாநகரின் நடுவில் அமைந்து இருந்தது. இந்த உலகின் மிகவும் சிறிய நாடு என்ற பெருமை வாடிகன் நகரையேச் சேரும். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான

போப்பாண்டவர் கோலோச்சும் நகரம். உலக வரலாற்றின் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட பல கட்டிடங்கள் அந்நகரில் இருந்தது. அதில் தலைசிறந்தது புனித பீட்டர் தேவாலயம் ஆகும். உலகின் மிகப்பெரிய தேவாலயமான அதற்குள் நுழையும் அனைவரும் ஆண்டவனை மட்டும் தேடும் நோக்கத்தில் வருவதில்லை. அதன் சுவர்களில் தீட்டப்பட்ட அற்புத ஓவியங்களை காணவும், பளிங்குத் தரைகள், தங்கத்தில் இழைக்கப்பட்ட நுட்பமான வேலைப்பாடு கொண்ட தூண்கள் போன்றவற்றை காணவும் சிலர் வரவே செய்தனர்.

மைக்கேலாஞ்சலோவின் கைவண்ணத்தில் உருவான 'பியேட்டா' கலை ரசிகர்களின் மத்தியில் மிகவும் பிரபலம். ராபர்ட் அதன் முன் நின்று கொண்டிருந்தான். அந்தப் பளிங்கு சிலையின் அழகில் தன்னையே மெல்ல இழந்து கொண்டிருந்தான். சிலுவையில் அறையப்பட்ட பின் கீழே கொண்டுவரப்பட்ட இயேசுவின் உடலை அவர் தாய் மேரியின் மடியில் இருப்பதைப் போன்று இருந்த அந்த சிலை மிகவும் தத்ரூபமாக வடிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ராபர்ட் வேறு எதைக் குறித்தும் சிந்திக்கும் சக்தி அற்றவனாய் இருந்தான். தன் சட்டைப் பையில் இருந்த செல்போன் ஒலியைக் கூட உணராமல் இருந்தான்.

சுற்றி இருக்கும் மற்றவர்கள் இவனை உற்று நோக்கிய பிறகு வேகமாக அதைக் கையில் எடுத்து பச்சைப் பொத்தானை அழுத்தினான். அவசரத்தில் அழைத்தது யார் என்று பார்க்காமல் பேசினான்.

மெல்லிய குரலில் "ஹலோ!" என்றான்.

"ஆச்சரியம் ஆண்டவரே. இன்று மிகவும் பொன்னான நாள்! கடைசியாக ராபர்ட் என்னிடம் பேசி விட்டார்" என்று கேலி பேசியது மறுமுனையில் இருந்த ஆண் குரல், ஆங்கிலத்தில்.

"சார்! நீங்களா? நான் ரொம்ப முயற்சி பண்ணிட்டு இருக்கேன். என்னை நம்புங்க... ஆனாலும் எனக்கு அது கிடைக்கல... ப்ளீஸ் சார்!" என்று கெஞ்சினான்.

அவன் கூறியதை சற்றும் பொருட்படுத்தாமல் "ராபர்ட்! வாடிகனில் நல்லா பொழுது போகுதா? உனக்கு எப்போ என்ன வேணும்னாலும் எனக்கு போன் பண்ணு. பணம் எதுவும் அனுப்பவா?" என்றது அந்த குரல்.

“சார் சார்... அப்படி எல்லாம் எதுவும் இல்லை சார்! உள்ள போனவங்க என்ன ஆனாங்கன்னு தெரியல. எந்த தகவலும் அவங்க அனுப்பல சார்!”

“அடடே அப்படியா? பாவம் ராபர்ட் நீ. உன் முட்டாள்தனத்தை நினைச்சு கவலைப்பட எனக்கு நேரமில்லை. பதினஞ்சு நாள் கழிச்சு இந்த பதில் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம்?” என்று கடிந்துகொண்டார் மறுமுனையில் இருந்தவர்.

“இன்னும் கொஞ்சம் டைம் குடுங்க சார். கண்டிப்பா தகவல் வந்துடும்” என்று மன்றாடினான் ராபர்ட்.

“எவ்வளவு நேரம் எடுத்துக்கப்போற? உள்ள இருந்து தகவல் வர வேண்டிக்கோ. இல்ல உன் உடம்புல உன் தலை இருக்காது!” என்று மிரட்டல் விடுத்த பின் அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டது.

ராபர்ட் மனதில் பயம் மெல்ல எட்டிப் பார்த்தது.